# வேத புத்தகமே, வேத புத்தகமே

வேத புத்தகமே, வேத புத்தகமே
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

பேதைகளின் ஞானமே, - பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே, - பாக்யர் விரும்புந் தேனே!

என்னை எனக்குக் காட்டி - என் நிலைமையை மாற்றிப்,
பொன்னுலகத்தைக் காட்டிப் - போகும் வழி சொல்வாயே.

துன்பகாலம் ஆறுதல் - உன்னால்வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய் - என்றும் நம்பின பேர்க்கே.

பன்னிரு மாதங்களும் - பறித்துண்ணலாம் உன்கனி;
உன்னைத் தியானிப்பவர் - உயர்கதி சேர்ந்திடுவார்.